செ.வெ.எண் : 18 / ஜூன் நாள் : 09.06.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முகவர்களுக்கான சீராய்வு கூட்டம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரத்தில் இன்று (09.06.2017) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிராமிய சுயவேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் சார்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முகவர்களுக்கான சீராய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசு, ஆதரவற்ற முதியோர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் விதமாக முதியோர் உதவித்தொகையாக மாதந்தோறும் ரூ.1000/- வீதம் முதியோர்களுக்கு வழங்கி வருகின்றது. முதியோர் உதவித்தொகை பெறுவதற்கு, வட்டாட்சியர் அலுவலகங்களில் இதற்கான விண்ணப்ப படிவத்தைப் பெற்று , பூர்த்தி செய்து வயது மற்றும் இருப்பிட சான்றுகள் இணைத்து சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். இந்த முதியோர் உதவித் தொகையானது இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றது. எனவே முதியோர் உதவித் தொகையை காலதாமதமின்றி தவறாமல் ஒவ்வொரு மாதமும் முதியோர்களுக்கு சென்றடைய செய்வதில் வங்கி முகவர்களின் பங்கு மிகவும் இன்றியமையாததாகும்.

மேலும் ஊரக பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்வில் ஏற்றம் பெறும் விதமாக மகாத்மா காந்தியின் 100 நாள் வேலைவாய்ப்பு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் நபர்கள் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் வங்கி கணக்கு வைத்திருப்பது மிகவும் அவசியம். சம்பளம் சம்பந்தப்பட்ட நபர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து வங்கி முகவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக கிராமிய சுயவேலைவாய்ப்பு பயிற்சி மையத்தின் சார்பாக பயிற்சி அளிக்கப்படுகிறது. வங்கி முகவர்களுக்கு சமுதாயத்தில் உள்ள பங்கு மற்றும் கடமைகள் ஆகியவை குறித்தும் விளக்கம் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் பங்கேற்ற 50க்கும் மேற்பட்ட IOB வங்கி முகவர்கள் இந்த பயிற்சியினை முழுமையாக பயன்படுத்தி பணியினை செவ்வனே செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மண்டல மேலாளர்கள் (தூத்துக்குடி) திருமதி.உமா மகேஸ்வரி, (இராமநாதபுரம்) திரு.எஸ்.குணசேகரன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.கே.எஸ்.சுரேஷ் பாபு, கிராமிய சுயவேலைவாய்ப்பு பயிற்சி இயக்குநர் திரு.சியாமளாநாதன் உள்பட அரசு அலுவலர்கள், வங்கி முகவர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**